புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜூலை 26, 2018 | புரட்சி 17 | முழக்கம் 28 | விலை: ரூ.3.00

## சென்னைக் கருத்தரங்கில் ஆய்வாளர்கள் தெளிவுரை

# எட்டுவழிச் சாலை மக்களுக்கு அல்ல; கார்ப்பரேட்டுகளுக்கே!

*‘பூவுலகின் நண்பர்கள்’ சென்னையில் நடத்திய கருத்தரங்கில் பேசிய ஆய்வாளர்கள் எட்டு வழிச் சாலை சட்டத்துக்கும் மக்களுக்கும் எதிரானது என்பதை விளக்கினர்.*

‘பூவுலகின் நண்பர்கள்’ சார்பில் ‘புதிய எட்டு வழிச் சாலை’, ‘அறிவியல் - சூழலியல் சட்டரீதியான பார்வை’ என்ற தலைப்பில் 22.7.2018 மாலை 5.30 மணியளவில் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள நிருபர்கள் சங்கத்தில் ஆய்வரங்கம் நடந்தது. பேராசிரியர் கே.பி.சுப்ரமணியன் (ஓய்வு - நகர கட்டமைப்பு பொறியியல் துறை, அண்ணா பல்கலைக் கழகம், பேராசிரியர் ஜனகராஜன் (தலைவர், தெற்காசிய நீர் ஆராய்ச்சி நிறுவனம்), வெற்றிச் செல்வன் (வழக்கறிஞர்) ஆகியோர் பங்கேற்றுப் பேசினார்கள். பொறியாளர் சுந்தர்ராஜன் (பூவுலகின் நண்பர்கள்) நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

பொறியாளர் சுந்தர்ராஜன் தனது தொடக்க உரையில் கடந்த 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழகத்துக்கு அனுமதிக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தில் இந்த எட்டு வழிச் சாலை பற்றிய எந்தக் குறிப்பும் இடம் பெறவில்லை. பிறகு 2018 பிப். 25ஆம் தேதி எழுதிய கடிதத்தில், இந்த எட்டு வழிச் சாலைக்கு அனுமதி கேட்க அடுத்த நாளே பிப்.26ஆம் தேதி மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் வந்து விடுகிறது. 277 கிலோ மீட்டர் சாலைக்கு 2900 ஹெக்டர் விவசாய நிலங்களைக் கைப்பற்றப் போகிறார்கள். ஏற்கனவே சென்னை - சேலத்துக்கு நான்கு சாலைகள் இருக்கின்றன. இந்த சாலைகளில் போக்குவரத்து நெருக்கடிகளே இல்லாத நிலையில், இந்தப் புதிய சாலையைப் போட வேண்டிய அவசியமென்ன? இந்த சாலை வசதியைப் பயன்படுத்துவோர் நான்கு சக்கரவண்டிகளைவிட இரண்டு சக்கர வண்டிகளைப் பயன்படுத்துவோர்தான் அதிகம். 36 சதவீதம் மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. அமையவிருக்கும் 8 வழிச் சாலையில் கண்டெய்னர்கள் லாரிகளை மட்டுமே அனுமதிக்கப் போகிறார்கள். இரு சக்கர வாகனங்களை அனுமதிக்கப் போவது இல்லை; அப்படியானால் இந்த சாலை யாருடைய நலனுக்காகப் போடப்படுகிறது?

கஞ்சமலையிலிருந்து தாதுக்களை கண்டெய்னரில் துறைமுகத்துக்குக் கொண்டுவர ஜிண்டால் கார்ப்பரேட் நிறுவனங்களின் நலனுக்காகப் போடப் படுகிறதா? திட்டத்தை முடிப்பதற்கு 40 ஆண்டுகள் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் 2019க்குள் இருக்குமாம். 2019இல் தான் நாடாளுமன்ற தேர்தலும் வரப் போகிறது. தமிழ்நாட்டை பாதுகாப்பு மண்டலமாக அறிவித்திருக்கிறார்கள். இந்த மண்டலத்தில் ஓசூர், கோவை, திருச்சி, காட்டுப்பள்ளி ஆகிய பகுதிகளோடு கல்பாக்கத்தையும் இணைத்திருக்கிறார்கள். கல்பாக்கத்தில் அணுமின் நிலையம் தான் செயல்படுகிறது. இதை பாதுகாப்பு மண்டலத்தில் இணைக்க வேண்டிய அவசியம் என்ன? அணுமின் நிலையங்கள் வெடிகுண்டுகள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்ற சந்தேகம் இதன் மூலம் உறுதியாகிறது. இந்தப் பாதுகாப்பு மண்டலத் தொடக்க விழாவில் பேசிய மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், “இனி எவரும் விவசாயத்தில் ஈடுபடாதீர்கள்; விவசாயத்தை விட்டு வேறு தொழிலுக்கு வாருங்கள்” என்று வெளிப்படையாகவே பேசினார். ஆக, தமிழகத்தில் விவசாயத்தை ஒழித்து, இதை இராணுவத்தின் பாதுகாப்பு மண்டலமாக்கும் ஆபத்துகள் தொடங்கி விட்டதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேசினார்.



பேராசிரியர் கே.பி.சுப்ரமணியம் பேசுகையில், “எந்த சாலைகள் அமைத்தாலும் அந்த சாலைகளுக்கான கட்டமைப்பு விதிமுறைகளைக் கண்காணிக்க, ‘இந்தியன் சாலை காங்கிரஸ்’ என்ற அமைப்பின் ஆலோசனை ஒப்புதலைப் பெற்றாக வேண்டும். இது சட்ட அங்கீகாரம் பெற்றுள்ள அமைப்பு. ஒரு சாலை அமைக்கும்போது அதற்கு செலவிடும் தொகை நியாயமானதா? செலவிடும் தொகைக்கேற்ப அடுத்து வரும் காலங்களில் பயன்தரக் கூடியதாக இருக்குமா? ஒரு சாலை அமைக்க வேண்டும் என்றால், அதற்கு மாற்றாக வேறு சாலைகள் குறைந்த செலவில் அமைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறதா? அப்படி வாய்ப்புகள் இருக்கும்போது கூடுதல் செலவில் எதிர்காலத்தில் முதலீட்டுக்கு ஏற்ற பயன் தராத சாலைகளை அமைக்க வேண்டுமா? ஒரு சாலை அமைக்கும்போது அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் எத்தகையது? இந்தப் பாதிப்புகளைக் குறைக்கக்கூடிய மாற்று வழிகளுக்கு சாத்தியமிருக்கிறதா? வேளாண் நிலங்கள் எவ்வளவு கைப்பற்றப்படுகின்றன? வேளாண் நிலங்களை எடுக்காமலே திட்டத்தை அமுல்படுத்த வாய்ப்புகள் இருக்கிறதா? என்பது குறித்து ‘இந்தியன் சாலை காங்கிரஸ்’ அமைப்பு ஆய்வு நடத்தும். இந்த ஆய்வுகள் நடத்தி ஒப்புதல் கிடைத்தால் மட்டுமே சாலை அமைக்கும் பணியைத் தொடங்க முடியும். சாலை அமைக்கும்போது நிலம் கையகப்படுத்துவோர் கருத்தைக் கட்டாயம் கேட்க வேண்டும் என்று இந்த அமைப்பு ஒழுங்கு விதி முறைகளை வகுத்திருக்கிறது. இப்போது அமைக்கப்பட இருக்கும் எட்டு வழிச்சாலை திட்டத்துக்கு ‘இந்தியன் சாலை காங்கிரஸ்’ மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இது சட்டப்படி குற்றம்” என்றார் அவர்.

தெற்காசிய நீர் ஆராய்ச்சி நிறுவனர் பேராசிரியர் ஜனகராஜன் பேசுகையில், “இத்திட்டம் வளர்ச்சிக்கான திட்டம் என்றால் அது யாருக்கான வளர்ச்சி? மக்களுக்கான வளர்ச்சியா? கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வளர்ச்சியா?” என்று கேள்வி எழுப்பினார்.

‘பசுமை வழிச்சாலை’ என்று கூறுவதே தவறு. இதற்கு ‘புரியாத புதிர்ச் சாலை’ (Mystery Project) என்றுதான் பெயர் சூட்ட வேண்டும். இத்திட்டத்துக்கான தேவை, சாத்தியம் குறித்து எந்த ஆய்வும் நடத்தப்படவில்லை. திட்ட அறிக்கையில் சாலை போடப்படும் தர்மபுரி, திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களின் வரலாறுகளையே திட்டத்தின் அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள்.

நாம் ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம். ஜனநாயகம் என்றால், மக்களின் உணர்வுகளை, விழுமியங்களை மதிக்க வேண்டும். நாம் ஒன்றும் அரசர்கள் ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. ஜனநாயகத்தில் மக்கள்தான் முதன்மையானவர்கள். ஆனால் மக்களைவிட கார்ப்பரேட் கம்பெனிகள் தான் முதன்மையானவர்களாகக் கருதப்பட்டு அவர்களுக்காகவே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. சென்னையிலிருந்து சேலத்துக்கு இரண்டு மணி நேரத்தில் போய்ச் சேரவேண்டும் என்பதற்கான அவசரம் என்ன வந்தது? மக்கள் அவ்வளவு அவசரமாகப் போய் எதை சாதிக்கப் போகிறார்கள்? எனவே தான் சொல்கிறேன், இது மக்கள் நலனைக் கருதி கொண்டுவரப்பட்ட திட்டம் அல்ல; கார்ப்பரேட்டுகளின் நலனுக்கு இப்படி ‘அவசரம்’ தேவைப்படுகிறது.

வளர்ச்சிக்கான திட்டங்கள், பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் எல்லாம் இப்போது தொழில்நுட்ப அடிப்படையில் செயல்படுகிறது. தொழில்நுட்பமே வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தும் தூண்டுதல் சக்தியாக இருக்கிறது. இந்தத் தொழில்நுட்பத்தின் வழியாக மேற்கொள்ளப்படும் வளர்ச்சிகள் மக்களுக்குப் பயன்படுவதாகவும் மக்களுக்கு கேடு செய்யாதவையாகவும் இருக்க வேண்டும். உண்மையிலேயே இந்த எட்டுவழிச் சாலையால் மக்கள் பயனடைவார்கள் என்றால், மக்கள் ஏன் இவ்வளவு கொதித்தெழுந்து போராட வேண்டும்? சுற்றுச் சூழலும் விவசாயமும் ஒரு மக்கள் நல அரசு முன்னுரிமை தர வேண்டிய திட்டங்கள். ஆனால் நிதி ஒதுக்கீட்டில் இந்தத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு அலட்சியப்படுத்தப்படுகின்றன.

ஏராளமான துறைமுகங்களை உருவாக்குவதால் பயனடையப் போவது யார்? ஏற்றுமதி தான் அதன் இலக்கு; கார்ப்பரேட்டுகளுக்குத்தான் அதனால் பயன்.

ஒரு விவசாயிடமிருந்து நிலத்தை எடுப்பது என்றால், அது நிலம் தொடர்புடைய பிரச்னை மட்டுமல்ல; அந்த நிலத்தோடு வாழ்ந்து, அந்த நிலத்தோடு உறவு கொண்டு, அந்த நிலத்தின் பின்புலத்தில் தனது கலாச்சாரத்தைக் கட்டமைத்துக் கொண்டு ஒரு விவசாயி வாழ்கிறார். வாழ்க்கையோடு இணைந்திருக்கிறது அவரது நிலம். திடீரென்று நிலத்தை எடுத்துக் கொள்கிறேன்; அதற்கான இழப்பீட்டைப் பெற்றுக் கொள் என்றால், அந்த

(4ஆம் பக்கம்)

### ஆக. 20 முதல் 26 வரை “தமிழர் கல்வி உரிமை” பரப்புரைப் பயணம்

திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு 17.7.2018 அன்று சென்னையில் தலைமைக் கழகத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. தலைமைக் குழு உறுப்பினர்கள் ஈரோடு இரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, பால் பிரபாகரன், கோபி. இளங்கோவன், தபசி குமரன், இரா. உமாபதி, அன்பு தனசேகரன், மேட்டூர் சக்தி, அய்யனார், சூலூர் பன்னீர் செல்வம், பாரி சிவக்குமார், பரிமளராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். கழக செயல்பாடுகள், கட்டமைப்பு நிதி, கழக அமைப்புகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டன. ‘தமிழர் கல்வி உரிமைப் பயணம்’, பரப்புரை இயக்கத்தை ஆகஸ்டு 20 தொடங்கி 26இல் நிறைவு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

குடியாத்தம், கீழப்பாவூர், மேட்டூர், திருப்பூர், சென்னை, மயிலாடுதுறை ஆகிய ஊர்களிலிருந்து பரப்புரைக் குழு பெரம்பலூர் நோக்கிப் புறப்படும். பெரம்பலூரில் ஆக.26இல் மாநாடு நிறைவு விழா நடைபெறும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

# பிரிஸ்டல் பல்கலைக் கழகத்தின் ஆய்வு

## மதங்களைக் கைவிட்ட நாடுகளே பொருளாதார வளர்ச்சி அடைய முடியும்

“மதங்களைக் கொள்கையாக ஏற்றுக் கொண்ட மத ஆட்சிகள், அந்தக் கொள்கையை கைவிடுமானால், பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற வாய்ப்புகள் உண்டு” என்று இங்கிலாந்தில் உள்ள ‘பிரிஸ்டல் பல்கலைக்கழகம்’ நடத்திய ஆய்வு தெரிவிக்கிறது. ஆய்வின் முடிவுகளை சர்வதேச புகழ் பெற்ற ‘சயின்ஸ் அட்வான்சஸ்’ (Science Advances) இதழ் வெளியிட்டுள்ளது. ‘மதச்சார்பின்மை’யைப் பின்பற்றும் நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் சாத்தியமா என்ற கேள்வி, கடந்த பல ஆண்டுகாலமாகவே சமூக ஆய்வாளர்களால் விவாதிக்கப்பட்டு வந்தது. இந்தக் கேள்விகளுக்கு விடை தருவதாக இந்த ஆய்வு முடிவுகள் வெளி வந்திருக்கின்றன.

கடந்த காலங்களில் சமூக ஆய்வாளர்களிடையே இரண்டு கருத்துகள் முன் வைக்கப்பட்டு வந்தன. தொழில்நுட்பமும் அறிவியலும் வளர வளர மதங்களின் பல்வேறு செயல்பாடுகள் மறையத் தொடங்கிவிடும் என்று ஒரு சாரார் கூறி வந்தனர். மதத்தை நம்பிக் கொண்டு உழைப்பவர்களின் கலாச்சாரத்தால் ‘முதலாளித்துவம்’ வளர்ச்சியடையும் என்று மற்றொரு சாரார் கூறி வந்தார்கள்.

“மதத்துக்கும் உடைமைகளுக்கும் (சொத்து) உள்ள தொடர்புகள் குறித்து நீண்டகாலமாக விவாதங்கள் நடந்து வருகின்றோம். இந்த நிலையில் இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் பல்கலைக்கழக ஆய்வு – புதிய வெளிச்சத்தைத் தந்திருக்கிறது. “ஒரு நாடு எந்த அளவுக்கு மத நம்பிக்கையில் மூழ்கி இருக்கிறதோ, அந்த அளவுக்கு ஏழ்மையில் சிக்குண்டு கிடக்கிறது” என்று புதிய ஆய்வு கூறுகிறது. அல்பேனியாவிலிருந்து ஜிம்பாவே வரை உள்ள உலகின் பல்வேறு நாடுகளின் தனி மனித வருவாய், சமூகப் பிரச்சினை, நாணய மதிப்பு, வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை சேகரித்து விரிவாக நடத்தப்பட்ட ஆய்வு இது. “ஒரு நாட்டின் பொருளாதாரம்


THE TIMES OF INDIA, CHENNAI
SATURDAY, JULY 21, 2018

TIMES TRENDS

**Secular countries are likely to be wealthier**

**Tolerance And Respect For Individual Rights Lead To Economic Development: Study**

Josh Gabbatiss

A shift away from religion may make countries more prosperous, according to a new study.

Using data on countries ranging from Albania to Zimbabwe, researchers analysed the relationship between values held by different nations and their GDPs.

They found that lack of religion tended to come before economic growth over the ... highly religious.

While the new research does not demonstrate a causal link between lack of godliness and economic development, it suggests that wealth is not in itself the cause of secularisation.

“Our findings show that secularisation precedes economic development and not the other way around,” said Damian Ruck, the study's lead researcher at the University of Bristol.

... lished in the journal ‘Science Advances’, they used data from the European Values Survey and the World Values Survey, which have been taken since 1990 and ask a huge variety of questions about everything from family values to views on homosexuality.

To work out people's values from earlier than 1990, they looked at the views of people born in previous decades on the basis that their views would be somewhat ... have predicted changes in GDP across the world. This doesn't mean that secularisation caused economic development, since both changes could have been caused by some third factor with different time lags, but at least we can rule out economic growth as the cause of secularisation in the past.”

Statistical analysis by Ruck and his colleagues suggested that tolerance for individual rights actually pro...

முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு அந்த நாடு மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம். மதச்சார்பின்மை என்ற கொள்கை வளர்ச்சிக்கு ஒரு முன் நிபந்தனை. மதச்சார்பற்ற கொள்கையைப் பின்பற்றுவதாலேயே பொருளாதார வளர்ச்சி தானாக வந்து விடும் என்பது இதன் அர்த்தமல்ல” என்று ஆய்வுக் குழுவை வழி நடத்திய டேமியன் ரக் (Damien Ruck) கூறியுள்ளார். “அதே நேரத்தில் மதச்சார்பின்மை என்ற கொள்கை வழியாக தனி மனித உரிமைகளையும் மாண்புகளையும் கூடுதலாக மதித்துப் பின்பற்றும்போது பொருளாதார முன்னேற்றத்தை அது சாத்தியமாக்குகிறது. இது எங்கள் ஆய்வில் கண்டறிந்த முடிவு” என்றார் ரக்.

மனித உரிமைகளுக்கும் மாண்புகளுக்கும் உரிய மரியாதை அங்கீகாரம் பெறுவதையே ‘சுயமரியாதை’ – என்றார் பெரியார்.

“மனிதத்தன்மையைக் காட்டும் உரிமையுடையது மானம்தான். அத்தன்மையாகிய சுயமரியாதையைத்தான் மனிதன் சுயமரியாதையாகக் கொண்டிருக்கிறான்” – என்றார் பெரியார்.

அதேபோல், மத நம்பிக்கைகள், பொருளாதார வளர்ச்சியைத் தடுத்து ஏழ்மையில் மூழ்கச் செய்கிறது என்று இப்போது வெளி வந்திருக்கும் ‘பிரிஸ்டால்’ பல்கலைக்கழக ஆய்வுக் கருத்தை பெரியார் 1931ஆம் ஆண்டிலேயே கூறுகிறார்:

“நமது பொருளாதார கஷ்டமெல்லாம் முதலாவது அநாவசியச் செலவு களுக்கும், அவற்றிற்கும் அதிக செலவுகளேயாகும். 100க்கு 90 பேருடைய சம்பாதனைகள், குடும்பப் பெருக்கம், மூடநம்பிக்கை யாவைகளுக்கும், சோம்பேறிகளாய் வாழ்கிறவன் சுகபோகத்துக்கும் செலவிடுவதாலேயே வீணாகி விடுகின்றன” என்றார் பெரியார். (‘குடிஅரசு’ 18.1.1931)

1990க்கு முன் உலகம் முழுதும் மக்கள் எவற்றையெல்லாம் உயர்வானவை என்று ஏற்றிப் போற்றினர்கள்? 1990க்குப் பிறகு உயர்ந்த மதிப்பீடுகளாக மதித்துப் போற்றியவைகளை அப்படியே பின்பற்றினார்களா? அல்லது 1990க்குப் பிறகு மாற்றங்கள் வந்திருக்கிறதா என்பது குறித்தும் ஆய்வுகள் விரிவாக நடத்தப்பட்டன.

“20ஆம் நூற்றாண்டில் மக்கள் நம்பிய மதம் தொடர்பான பல நம்பிக்கைகளிலும் செயல்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டு பல நம்பிக்கை சடங்குகளை கைவிட்டுள்ளார்கள். அந்தப் போக்கு தனி மனித வருவாயில் (ஜி.டி.பி) மேம்பாட்டை ஏற்படுத்தியுள்ளது” என்று ஆய்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த டாக்டர் அலெக்ஸ் பென்ட்லே (Alex Bentley) கூறியுள்ளார்.

“சகிப்புத் தன்மை, தனி மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் தருதல் ஆகிய காரணிகள், மக்கள் நல அரசுகளில் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன என்பதும், மேற்குறிப்பிட்ட இரண்டு போக்குகளும் மதங்களைக் கடந்த மதச்சார்பற்ற கொள்கையைப் பின்பற்றும்போது இயல்பாக உருவெடுக்கிறது என்பதும்” ஆய்வாளர்களின் முடிவாகும்.

‘இந்து இராஷ்டிரம்’ அமைப்போம் – இந்தியா இந்துக்களின் நாடு என்று கூறிக் கொண்டு பார்ப்பன சமஸ்கிருதப் பண்பாடுகளைத் திணித்துக் கொண்டு பொருளாதார முன்னேற்றம் காண்பது இயலாது. மக்களை மீண்டும் படுகுழியில் மூழ்கச் செய்யும் என்ற உண்மையை இந்த ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

# சென்னை, ஈரோட்டில் காமராஜர் பிறந்தநாள் விழா

திராவிடர் விடுதலைக் கழகம் தென்சென்னை மாவட்டம், திருவான்மியூர் பகுதியில் கடந்த 18.07.2018 (புதன்கிழமை) மாலை 6 மணிக்கு “சமூக நீதியின் சரித்திரம்” பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் கூட்டம் ந.விவேக் (தென்சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்) தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு.தமிழ்தாசன், சே.கந்தன், பா.இராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இரா.வெங்கடேசன் வரவேற்புரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து கூட்டத்தின் தொடக்கமாக ‘யாழ்’ பறையிசை முழக்கத்தோடு, வீதி நாடகங்களை நடத்தினர். ந. அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்) மற்றும் இரா. உமாபதி (தென்சென்னை மாவட்டச் செயலாளர்) ஆகியோர் காமராசரின் வரலாற்றை குறித்து எடுத்துரைத்தனர். சிறப்புரையாற்றிய பேராசிரியர் சுந்தரவள்ளி, காமராசரின் சமூகநீதி வரலாற்றை நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து பெரம்பலூர் துரை தாமோதரனின் ‘மந்திரமல்ல! தந்திரமே!’ அறிவியல் விளக்க நிகழ்ச்சியை பகுதி மக்களிடையே ஒரு மணிநேரத்திற்கும் மேலாக நிகழ்த்தினார். பகுதி மக்களும் அறிவியல் விளக்கத்தை ஆர்வமுடன் கவனித்தனர். பகுதிவாழ் பெண்கள் பெருமளவில் திரண்டு, முன்வரிசையில் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் கேட்டனர். இறுதியாக மா.தேன்ராஜ் (திருவான்மியூர் பகுதி அமைப்பாளர்) நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.

**ஈரோடு :** ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 15.07.2018 ஞாயிறு மாலை 6:30 மணியளவில் சித்தோடு கொங்கம்பாளையத்தில் காமராஜரின் பிறந்தநாள் விழா எழுச்சியோடு கொண்டாடப்பட்டது. இவ்விழா சண்முகப் பிரியன் தலைமையில், இளங்கோ முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநகரத் தலைவர் திருமுருகன் வரவேற்புரையாற்ற, தமிழ்நாடு அறிவியல் மன்ற தோழர் வீரா கார்த்தி ‘மந்திரமல்ல தந்திரமே’ என்னும் அறிவியல் நிகழ்ச்சி நடத்திக் காட்டினார். இறுதியாக கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். கிருஷ்ணமூர்த்தி நன்றியுரை கூறினார்.

# கையால் மலம் எடுக்கும் இழிவைக் கண்டித்து விருதுநகரில் ஆர்ப்பாட்டம்

கையால் மலம் அள்ளத் தடை மற்றும் மறுவாழ்விற்கான சட்டம்-2015ஐ நடைமுறைப்படுத்த வலியுறுத்தியும், கையால் மலம் அள்ளும் அவல நிலையைப் போக்க, அதனால் ஏற்படும் மலக்குழி மரணங்களைத் தடுக்கவும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் விருதுநகர் மாவட்டத்தில் சூலை 9, 2018 அன்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு காலை 10 மணி அளவில் ஆதித் தமிழர் பேரவையின் மாவட்டச் செயலாளர் பூவை ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. ஆதித் தமிழர் பேரவை, அருந்ததியர் சனநாயக முன்னணி, தமிழ்ப் புலிகள் கட்சி, திராவிடர் கழகம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி, ஏஐடியூசி ஆகிய அமைப்பைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். திராவிடர் விடுதலைக் கழக சார்பில் விருதுநகர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.செந்தில் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## மலக்குழியில் இறங்கிய மனிதரை தடுத்து மயிலை தோழர்கள் போராட்டம்

மந்தவெளி செண்ட் மேரிஸ் பாலத்திற்கு அருகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (08.07.2018) அன்று மலக்குழியில் இறங்கி எந்த ஒரு பாதுகாப்பு கருவிகளும் இல்லாமல் இரண்டு பேர் வேலை பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட மயிலாப்பூர் பகுதித் தலைவர் இராவணன், பகுதி செயலாளர் மாரி மற்றும் மயிலாப்பூர் பகுதி கழகத் தோழர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி வெளியே மீட்டுள்ளனர். மேலும், மலக்குழியில் இனி மனிதர்களை இறக்கி வேலை வாங்கக் கூடாது என்று அவர்களை வேலைக்கு அனுப்பிய ஒப்பந்ததாரர்களை எச்சரித்து வந்துள்ளனர்.

இப்பகுதியில் இதுபோன்ற சம்பவத்தால் ஏற்கெனவே இரண்டு பேர் இறந்துள்ள நிலையில், பொறுப்பற்ற முறையில் மாநகராட்சி நிர்வாகம் மீண்டும் மீண்டும் மனிதர்களை மலக்குழியில் இறக்கி வேலை செய்ய கட்டாயப் படுத்துவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்தப் பிரச்சினையில் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு மலக்குழியில் மனிதர்களை இறக்குவதை முற்றிலுமாக தடுத்த வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து சென்னை மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்க மயிலாப்பூர் பகுதி கழகத் தோழர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## வன்கொடுமை தடுப்புச் சட்டம் நீர்த்துப் போவதை எதிர்த்து விழுப்புரத்தில் கழகம் பிரச்சாரம்

தாழ்த்தப்பட்ட - பழங்குடி இன மக்களாக கருதப்படுகின்ற மக்களின் உரிமைக்கு ஆதரவாக உள்ள வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளை தளர்வடையச் செய்து அவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரிக்கின்ற விதமாக தீர்ப்பு வழங்கியுள்ள உச்சநீதிமன்றத்தைக் கண்டித்தும் இந்த தீர்ப்புக்கு எதிராக மத்திய அரசு மேல்முறையீடு செய்யக் கோரியும் 2.7.2018 அன்று திராவிடர் விடுதலைக் கழகம், மார்க்சிஸ்ட் (இந்திய) கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சின்னசேலத்தில் தொடர்வண்டி (இரயில்) மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை தளர்வடையச் செய்கின்ற புதிய சட்டத்திருத்தத்தால் ஏற்படுகின்ற தீமைகள் குறித்து கொசப்பாடி, பூட்டை, அரசம்பட்டு, செந்தமிழ்பட்டு, சங்கராபுரம், வன்னஞ்சூர், அத்தியூர், கொளத்தூர், அரியலூர், பாக்கம், தொழுவந்தாங்கள், கடுவனூர் ஆகிய பகுதி மக்களிடம் சென்று விளக்கிக் கூறி பிரச்சாரம் செய்தனர்.

### குடியாத்தத்தில் தீண்டாமை வெறி: களமிறங்கினர் கழகத் தோழர்கள்

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகில் அக்ராவரம் கிராமத்தில் உப்பரபள்ளி ஆற்றின் அருகில் ஊரின் தெருவில் சென்றதற்காக 22.07.2018 அன்று 40 பேர் கொண்ட ஜாதிவெறி கும்பல் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஜெயபிரகாஷ், ஜெயச்சந்திரன், மணிகண்டன் ஆகியோர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியது. களத்தில் இறங்கிய கழகத் தோழர்கள் காயம் அடைந்தவர்களை மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி செய்து காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

# கடவுள் எங்கே? காட்டுங்கள் ! பிலிப்பைன்ஸ் அதிபர் சவால்



பிலிப்பைன்ஸ் அதிபர் அண்மையில் ஒரு துணிச்சலான கேள்வியைக் கேட்டுள்ளார். “கடவுளை எனக்கு முன்னால் கொண்டு வந்து காட்டுங்கள் அல்லது கடவுளுடன் செல்பியாவது எடுத்துக்காட் டுங்கள். உடனடியாக நான் கடவுள் இருக்கிறார் என்று நம்பிக்கைக் கொண்டு பதவி விலகி விடுகிறேன்” என்று கூறியுள்ளார்.

பாலினீஸிய பெருந்தீவுகளை ஒருங்கிணைத்து உருவான நாடு பிலிப்பைன்ஸ். பசிபிக் கடல் தொழில் மற்றும் குறுகியகாலப் பயிர் விவசாயம் என்று தொழில் செய்துவரும் பிலிப்பைன்ஸ் மக்கள் காலனி ஆதிக்கத்திற்கு முன்பு அவர்களுக்கென்று இயற்கையான பல வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தனர். கிழக்காசிய நாடுகளில் பெரிதும் பரவி இருந்த புத்த மதமும் அங்கு ஒரு மதமாக இருந்தது. இவர்களின் வழிபாட்டு முறைகள் அனைத்தும் மூடநம்பிக்கையற்றக் கொள்கை வடிவிலான நம்பிக்கையான ஒன்றாகவே இருந்தது.

காலனி ஆதிக்கம், அய்ரோப்பியர்களின் வருகை தொடர்ந்ததால் கிறித்துவம் மற்றும் இசுலாம் பரவியது. இருப்பினும் அந்த மதங்கள் மற்ற நாடுகளில் ஆழமாக இருக்கும் நிலையில் கடவுள் மற்றும் கட்டுக்கதைகள் தொடர்பான நம்பிக்கைகள் இன்றி ஒரு வாழ்வியல் நெறிகளாகவே பிலிப்பைன்ஸ் மக்கள் அதைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

அங்கு இருந்த பெரும்பாலான அதிபர்கள் மதச்சார்பற்ற தன்மையையே கடைப்பிடித்து வந்தனர். 2016ஆம் ஆண்டு பதவியேற்ற தற்போதைய அதிபர் ரோட்ரிகோ டுட்ர்டே சமரசமில்லாத பகுத்தறிவுவாதி மற்றும் கடவுள் மறுப்பாளராவார். இவர் வழக்குரைஞராக இருந்து பிறகு அரசியலுக்கு வந்தவர். மேலும் உலக வரலாற்றில் அதிக ஆண்டுகள் ஒரே நகரத்தில் மேயராக இருந்த பெருமையும் இவருக்கு உண்டு. பிலிப்பைன்ஸ் அரசமைப்புச் சட்டத்தின்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மேயர் தேர்தல்கள் நடைபெறும் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நீண்ட ஆண்டுகள் மேயராக இருந்தபோதும் அவர் தன்னுடைய மதச்சார்பற்றக் கொள்கையை தேர்தல் வெற்றிக்காக விட்டுக் கொடுக்கவில்லை. இவரது கண்டிப்பான பகுத்தறிவுக் கொள்கை காரணமாக இவர் மேலை நாடுகள் மற்றும் மதம் சார்ந்த அமைப்புகளின் கடுமையான விமர்சனத்திற்கு ஆளானார். ஆனாலும் பிலிப்பைன்ஸ் மக்கள் இவரைப் பெரிதும் விரும்பிய காரணத்தால் அரசியல் குழப்பம் ஏற்படுத்த வழியின்றி எதிர்ப்பாளர்கள் இருக்கின்றனர்.

இவர் மூடநம்பிக்கை மற்றும் மதம் சார்ந்த கொடுந்துன்புறுத்தல், செயல்பாடுகளுக்கு எதிரான கடுமையான கொள்கைகளை உடையவர். இப்படிப்பட்ட தன்மையை “சூன்ய சகிப்பு” என்று கூறுவர். ஒரு நாட்டுத் தலைவருக்கு இக்கொள்கைகள் இருப்பது மிகவும் அரிதான ஒன்றாகும். இவர் மேயர் ஆவதற்கு முன்பு “டிகோங் நகரம் பிலிப்பைன்ஸ் கொலைகளின் நகரம்” என்று அழைக்கப்பட்டது. இவர் மேயர் ஆன பிறகு எடுத்த சீர்திருத்த நடவடிக்கைகளின் காரணமாக “தென்கிழக்கு ஆசியாவின் மிகவும் அமைதியான நகரம்” என்ற புகழ்நிலையை எட்டியது.

இவரை பிலிப்பைன்ஸ் அதிபராக போட்டியிட இவர் சார்ந்திருந்த பிலிப்பைன்ஸ் புரட்சிகர குடியரசுக் கட்சி பலமுறை வேண்டுகோள் விடுத்தும், தனது தனது மதச்சார்பற்ற கொள்கைக்கு அதிபர் பதவி சரிப்பட்டு வராது, மக்களிடம் செல்வதற்காக என்னுடைய கொள்கையை விட்டுக்கொடுக்க வேண்டி இருக்கும் என்று கூறி மறுத்துவிட்டார். இருப்பினும் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க 21.11.2015 அதிபர் பதவிக்கு போட்டியிட இவரது பெயர் முன்மொழியப்பட்டது. பிறகு 2016ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு பிலிப்பைன்ஸ் அதிபரானார்.

இவர் அதிபர் ஆகும் முன்பும், அதிபர் ஆகிய பிறகும் இவரது பல்வேறு கருத்துகளால் உலக அளவில் பிரபலமாகி இருந்தார். முக்கியமாக, “போராளிக் குழுக்களுக்கு எதிராக நடந்த ராணுவ நடவடிக்கையை நிறுத்தி, நீங்களாக மக்களின் பாதைக்குத் திரும்பி விடுங்கள்” என்று வேண்டுகோள் விடுத்தார். ஆனால் போராளிக் குழுக்கள் அவரது வேண்டுகோளை ஏற்க மறுத்த பிறகு, “இராணுவத்தினர் போராளிகளைக் கொலை செய்யாதீர்கள்; அவர்களது பிறப்புறுப்புகளைச் சிதைத்துவிடுங்கள்” என்று கூறினார். இது மனித உரிமை ஆர்வலர்களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது,

கடந்த ஆண்டு பிலிப்பைன்சில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின்போது, “கிறித்துவ தேவாலயங்கள் பிரார்த்தனை என்ற பெயரில் நேரத்தை வீணடிக்காமல், மழையில் இருந்து தப்பிக்க நல்ல வழிவகைகளைச் சொல்லித்தர வேண்டும்” என்று கூறியிருந்தார். அதிலிருந்தே கிறித்துவ அமைப்புகள் இவர்மீது தொடர்ந்து விமர்சனங்களை வைத்து வந்தன. ஜூலை 7 ஆம் தேதி நடந்த பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிலிப்பைன்ஸ் அதிபர், “என்னை மத நம்பிக்கையுள்ளவர்கள் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர். அதுகுறித்து நான் கவலைப்படவில்லை. நான் கடவுளை கடுமையாக விமர்சிக்கிறேன்” என்றார் அவர்.

# சென்னை, மாநகர காவல் ஆணையாளரிடம் கழக சார்பில் புகார்

சென்னை அயனாவரம் பகுதியில் 11 வயதுள்ள ஏழாம் வகுப்பு படிக்கும் சிறுமி 17 மனித மிருகங்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்கள் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த நெஞ்சைப் பதறச் செய்யும் கொடுமையை செய்த அனைவரும் மிகக் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். இப்படி ஒரு கொடூர சம்பவம் மக்கள் மனதில் கொந்தளிப்பை உருவாக்கியுள்ள சூழலில் வதந்திகளை பரப்பி அதன் மூலம் இலாபம் அடைவதையே தங்கள் வேலைத் திட்டமாக வைத்துள்ள காவி வெறி கும்பல் திராவிடர் விடுதலைக் கழகத்தை சார்ந்த ஒருவரும் இந்த குற்றத்தை செய்துள்ள கும்பவில் ஒருவர் என “பால சுப்ரமணியன்” எனும் பெயர் உள்ள முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்கள்.

இந்தப் படத்தில் உள்ள நபருக்கும் எமது திராவிடர் விடுதலைக் கழகத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எங்கள் கழகத் தோழருக்கு இவர் யார் என்றே தெரியவில்லை.

இவர் கருப்புச்சட்டை அணிந்திருப்பது போன்று காட்டி அவதூறு பரப்புகிறது காவி கும்பல். ஆனால் இவர் அணிந்திருப்பது அடர்நீல (dark blue) நிற சீருடை.இது ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் (private security company) சீருடை ஆகும். கைது செய்யப்பட்டுள்ளவர்களில் 7 பேர் இந்த சீருடையை அணிந்துள்ளார்கள். இந்தப் படத்தில் உள்ள நபரின் சீருடையிலும் இடது மேல் சட்டையில் அவர்களின் நிறுவன அடையாள பட்டை உள்ளது. மற்ற அனைவருக்கும் இந்த அடையாளப் பட்டை உள்ளது. ஆனால் இதனை கருப்புச் சட்டை போல் திரித்து பச்சைப்பொய்யை பேசி அவதூறு பரப்பும் துணிச்சல் காவிக் கும்பலுக்கு மட்டுமே உண்டு.

இந்தப் பதிவை முதன் முதலாக பதிவிட்டதாக அறியப்படும் வீரமணி எனும் பெயரில் உள்ள முகநூல் கணக்கு இப்போது இல்லை. அந்தப் பதிவைத்தான் நான் பதிவிட்டேன் என கூறிதப்பித்துக் கொள்ளும் காவிக் கும்பலின் மலிவான தந்திரம்தான் இது.அட்மின் தான் பதிவிட்டார். நான் அதற்கு பொறுப்பில்லை என கூறி தப்பிக் கொள்ளப் பார்க்கும் பாஜக தலைவர் எச்.ராஜாவின் வழிதான் இது.

19.07.2018 மாலை 5 மணிக்கு கழக தென்சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், வடசென்னை மாவட்டச் செயலாளர் செந்தில் FDL மற்றும் கழகத் தோழர்கள் சென்னை காவல் ஆணையாளர் அலுவலகத்தில் புகார் மனுவை அளித்தனர்.

கழகத்தின் மீது அவதூறு பரப்பும் தீய நோக்கத்தோடு அவதூறு பரப்பும் வீரமணி என்பவரால் உருவாக்கப்பட்ட செய்தியினை பாலசுப்பிர மணியம், இராமலிங்கம், வெங்கட்ராஜூ மற்றும் பலரால் பகிரப்பட்டுள்ளது.

குற்றவாளிக்கும் திராவிடர் விடுதலைக் கழகத்திற்கும் எந்த தொடர்பும் இல்லாத நிலையில் வேண்டுமென்றே கழகத்திற்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும் உள்நோக்கத்தோடு அவதூறு பரப்பிய வீரமணியையும், அவருக்கு உடந்தையாக செய்தியினை வெளியிட்டு பரப்பிய பாலசுப்பிரமணியம், இராமலிங்கம், வெங்கட்ராஜூ போன்றோரின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 26.07.2018**

## பாதாளச் சாக்கடையை அகற்றும் ரோபோ

துப்புரவுத் தொழிலாளர்கள் பாதாளச் சாக்கடை குழாய்களில் இறங்கி அடைப்பைச் சரி செய்வதைத் தடுக்கவும், இதனால் ஏற்படும் விபரீதங்களைத் தடுக்கவும் தமிழகத்தில் முதன்முறையாகக் கும்பகோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை குழாய்களில் ஏற்படும் அடைப்புகளைச் சீரமைக்க ரோபோட் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு பரிசோதனை முயற்சியும் செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகராட்சியில் 2008-09-ம் ஆண்டு முதல் பாதாளச் சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 5,309 மேன்ஹோல் எனப்படும் ஆளிறங்கும் குழாய்கள் மற்றும் 125 கி.மீட்டர் நீளத்துக்குக் குழாய்களும் பதிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 19,421 வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை துப்புரவுப் பணியாளர்கள் இறங்கி சுத்தம் செய்வார்கள். அப்போது விஷவாயுக்கள் தாக்கி பல உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

மேலும், தொழிலாளர்களுக்கு மயக்கம் ஏற்பட்டு உடல் பாதிப்புகளும் ஏற்பட்டு பாதிக்கப்படுவர். இதையடுத்து பாதாளச் சாக்கடை ஆளிறங்கும் குழாய்களில் துப்புரவுத் தொழிலாளிகள் இறங்கி சுத்தம் செய்யக் கூடாது என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு அதற்கான வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளது.

ஆனாலும் பாதாளச் சாக்கடை குழாய்களில் அவ்வப்போது அடைப்பு ஏற்படுவது என்பது வழக்கமாகி வருகிறது. இதைத் தவிர்க்கும் நோக்கில் கேரளாவைச் சேர்ந்த விமல் கோபிநாத் என்ற பொறியாளர் குழுவினர் உருவாக்கியுள்ள ரோபோட் இயந்திரம் பாதாளச் சாக்கடைக் குழாய்களில் இறங்கி அடைப்புகளை சுத்தம் செய்யும் பணியைச் செய்து வருகிறது. இந்த இயந்திரத்தைக் கும்பகோணம் நகராட்சியிலும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்தின் சமூகப் பங்களிப்பு நிதியின் கீழ் 9.44 லட்சம் மதிப்பீட்டில் இந்த ரோபோட் இயந்திரத்தை வாங்கி கும்பகோணம் உதவி ஆட்சியர் பிரதீப்குமார், கும்பகோணம் நகராட்சி ஆணையர் உமாமகேஸ்வரியிடம் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து கும்பகோணம் ஸ்ரீநகர் காலனி சந்திப்பில் நகராட்சி நிர்வாக ஆணையர் பிரகாஷ், ரோபோட் இயந்திரத்தைப் பரிசோதனை முறையில் இயக்கி வைத்தார். இதுகுறித்து கும்பகோணம் நகராட்சி ஆணையர் உமாமகேஸ்வரி கூறுகையில், ‘‘கும்பகோணம் நகராட்சியில் பாதாளச் சாக்கடை குழாய்களில் அடைப்பு ஏற்பட்டால் முன்பு தவிர்க்க முடியாத சூழலில் பாதுகாப்புக் கவசங்களோடு துப்புரவுத் தொழிலாளர்கள் ஆளிறங்கும் குழாய்களில் இறங்கி சுத்தம் செய்து அடைப்பைச் சரி செய்வர். இதைத் தவிர்க்கும் பொருட்டு தற்போது ரோபோட் இயந்திரத்தை இந்தியன் ஆயில் நிறுவனம் நமக்கு வழங்கியுள்ளது. இதன் மூலம் பாதாளச் சாக்கடை குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை ரோபோட் உதவியுடன் சீரமைக்கப்படும்.

மேலும், கும்பகோணம் நகராட்சியில் அம்ருத் திட்டத்தின் கீழ் 45 வார்டுகளிலும் 10,000 வீடுகளுக்கு இணைப்பும், 49 கி.மீட்டர் தூரத்துக்குக் குழாயும், 1200 ஆளிறங்கும் குழாயும் பதிக்கப்படவுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள ரோபோட் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்’’ என்றார்.

இதுகுறித்து கேரளாவைச் சேர்ந்த பொறியாளர் விமல்கோவிந்த் கூறுகையில், ‘‘பாதாளச் சாக்கடை மேன்ஹோலில் தொழிலாளர்கள் இறங்கி வேலை பார்க்கும்போது பல்வேறு சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்க இந்த ரோபோட் இயந்திரம் வடிவமைக்கப்பட்டது. இந்த இயந்திரம் 60 கிலோ எடை கொண்டது. ஆறு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, தரையின் மேல் மானிட்டர் மூலம் கண்காணித்து அதற்கு ஏற்றவாறு ரோபோட் இயக்க முடியும். ஆறு மீட்டர் தூரம் வரை ரோபோட் குழாயினுள் சென்று அடைப்புகளைச் சரி செய்யும்.

முதலில் கடந்த 7 மாதங்களுக்கு முன் திருவனந்தபுரம் மாநகராட்சிக்கு இரண்டு இயந்திரம் வழங்கினோம். தற்போது கும்பகோணம் நகராட்சிக்கு ஒரு இயந்திரம் வழங்கியுள்ளோம். இந்த இயந்திரத்தின் தொகை 17 லட்சம். ரோபோட் இயந்திரத்தை இயக்குவதற்கு தற்போது பணியில் உள்ள நகராட்சித் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒரு மாதம் பயிற்சி அளிக்கப்பட உள்ளது’’ என்றார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# சட்ட நெறிமுறைகள் பின்பற்றப்படவில்லை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிக்கு அது உருவாக்கும் உளவியல் அதிர்ச்சி எத்தகையதாக இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். இந்த ‘அதிர்ச்சிக்கு’ இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்க முடியுமா?

நிலத்தை அரசு எடுத்தப் பிறகு, விவசாயிக்கு எழும் கேள்வி என்ன தெரியுமா? அடுத்து என்ன செய்யப் போகிறோம்; எதை செய்யப் போகிறோம் என்பதுதான். விவசாயம் என்பதைத் தவிர வேறு ஏதும் அவருக்குத் தெரியாது; கல்வி அறிவில்லாத ஏழ்மையில் உழலுகிற - விவசாயம் என்பதைத் தவிர வேறு எதுவே தெரியாத, அந்த விவசாயத் தோடு தொடர்புடைய கால்நடைகளை வளர்த்துப் பராமரிக்கிற; தங்கள் பிள்ளைகளை அந்த வருவாயில் படிக்க வைக்கிற; அந்த விவசாயத்தை நம்பி கடன் வாங்கிய ஒரு விவசாயிடமிருந்து நிலத்தை எடுப்பது அவரது வாழ்க்கையையே எடுப்பது; வாழ்க்கை ஓட்டத்தையே நிலைகுலையச் செய்வது அல்லவா?

பாதிக்கப்பட்டவர்களுக்கு ‘இழப்பீட்டு’த் தொகை வழங்குவது, விவசாயிகளுக்கான மறு வாழ்வு தருவதாக ஆகிவிடாது. ‘மறுவாழ்வு’ என்பது ஒரு தொடர்ச்சியான செயல்பாடு (Rehabilitation is not compensation; It is a process). அந்த விவசாயி பாதிப்பிலிருந்து மீள்வதற்கு அவருக்கு உளவியல் அடிப்படையில் ஆறுதலும் நம்பிக்கையும் (Counselling) தரப்பட வேண்டும். அப்படி ஏதும் செய்தார்களா? விவசாயி சார்ந்துள்ள சமூகம் அவரது பின்னணி பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டும். இதைப் பற்றி எல்லாம் கிஞ்சித்தும் கவலைப் படாமல் காவல்துறையைக் குவித்து வைத்துக் கொண்டு நிலத்தை மீட்பது ஒரு ஜனநாயக நாட்டுக்குரிய மாண்பு தானா? நிலத்தை எடுத்துக் கொண்டு ஒரே தவணையில் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள் என்று கூறுவது ஒரு கிரிமினல் குற்றம். நிலத்தோடு தன்னை உணர்வு ரீதியாகப் பிணைத்துக் கொண்டுள்ள விவசாயி, நிலத்தை பறி கொடுக்கும்போது அவர் உடல்நலம் பாதிப்படையக் கூடிய ஆபத்துகள் இருக்கின்றன.

இப்போது நீங்கள் தரும் இழப்பீட்டுத் தொகையை எந்த அடிப்படையில் நிர்ணயிக்கிறீர்கள்? இதை நிர்ணயிப்பது யார்? விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி பாலம் கட்டி முடித்த பிறகு, நிலத்தின் மதிப்பு மேலும் பன்மடங்கு அதிகரிக்கவே செய்யும். அப்போது நிலம் கொடுத்த விவசாயிக்கு அந்தப் பயன் கிடைக்கப் போகிறதா? சாலையைப் பயன்படுத்தும் கார்ப்பரேட் நிறுவனங்கள்தான் அந்தப் பயன்களைப் பெற்று கொழுக்கப் போகிறார்கள்.

பல அய்ரோப்பிய நாடுகளில் இதுபோல் சாலைகளை அமைக்கும் போது விவசாயிகளின் கருத்தைக் கேட்கிறார்கள். சாலை அமைக்க வேண்டுமா வேண்டாமா என்று கேட்கிறார்கள். சாலைகள் அமைத்தால் அங்கே வசூலிக்கப்படும் சுங்கவரிகளில் விவசாயிகளுக்கு உரிய பங்கைப் பிரித்து வழங்குகிறார்கள். இப்போது போடப்படும் சாலையின் ஒரு பக்கம் நிலம் இருந்தால் சாலையின் மறு பக்கம் விவசாயிகள் வீடு இருக்கும். அவர் வீடும் நிலமும் துண்டாடப் படுகிறது. ஒரு பகுதி நிலத்திலிருந்து மற்றொரு பகுதிக்குப் போக வேறு ஊர் போய்த் தான் வரவேண்டும். இதற்குப் பெயர் ‘நிலப் பாகுபாடு’ . இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டீர்களா?

காவிரி பாசனப் பகுதியிலிருந்து இதுவரை 20 சதவீத நிலம் விவசாயம் சாராத திட்டங்களுக்கு எடுக்கப்பட்டு விட்டன. தமிழ்நாட்டில் நகர்ப்புறமாதல் அதிகரித்திருக்கிறது. 48 சதவீதம் மக்கள்தான் கிராமத்தில் வாழ்கிறார்கள். 52 சதவீதம் பேர் நகரத்துக்குக் குடிபெயர்ந்து விட்டனர். இப்படி நகரமயமாவது வளர்ச்சியின் காரணமாக அல்ல; கிராமங்களில் உருவாகும் வறட்சி, நெருக்கடி, வேலை வாய்ப்பின்மைதான். அவர்களை நகரங்களை நோக்கித் தள்ளுகின்றன. வளர்ச்சிக்கான திட்டங்கள், மக்களுக்காக அல்ல; கார்ப்பரேட் நலன்களுக்காகவே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்” என்றார் பேராசிரியர் ஜனகராஜன்.

வழக்கறிஞர் வெற்றிச் செல்வன் பேசுகையில், “தமிழ்நாட்டில் நடக்கும் ஆட்சி நிர்வாகம் அடக்குமுறையும் மிரட்டலையும் கையில் எடுத்திருப்பதை சுட்டிக் காட்டினார். மக்கள் நலனுக்காகக் குரல் கொடுப்போருக்கு ‘சமூக விரோதிகள்’, ‘நக்சலைட்டுகள்’ என்று பட்டம் சூட்டப்படுகிறார்கள். நிலம் கையகப் படுத்துதல் குறித்து 2013இல் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டம் உள்ளூர் மக்கள், கிராம பஞ்சாயத்துக்கள் ஆலோசனை பெற வேண்டும். சமூக ரீதியான பாதிப்புகள் இருக்கிறதா என்பதை ஆராய வேண்டும். மக்கள் கருத்தைக் கேட்க வேண்டும் என்று பல்வேறு நல்ல அம்சங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த அம்சங்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு, அரசு விரும்பினால் நிலத்தை எடுக்கலாம் என்று 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நெடுஞ்சாலைத் துறை சட்டத்தைப் பயன்படுத்தி இப்போது நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது. 1956ஆம் ஆண்டு நெடுஞ்சாலைக்கான சட்டத்தை 2013ஆம் ஆண்டு சட்டம் கட்டுப்படுத்தாது என்று விதிவிலக்கு கொடுத்து விட்டார்கள் என்றார் வழக்கறிஞர் வெற்றிச் செல்வன்.

தொடர்ந்து பார்வையாளர் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பேச்சாளர்கள் விளக்கங்களை அளித்தனர். கடும் அச்சுறுத்தல், கெடுபிடிகளுக்கிடையே ‘பூவுலகின் நண்பர்கள்’ ஏற்பாடு செய்த இந்த கருத்தரங்கு செறிவான விளக்கங்களைத் தருவதாக அமைந்திருந்தது. கூட்டம் தொடங்கும் முன்பே இருக்கைகள் நிரம்பி வழிந்தன.

**தொகுப்பு : இரா**

# திருப்பூரில் ஜாதிவெறியைக் கண்டித்துக் கழகம் மறியல்

*திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், தலித் விடுதலைக் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஆதிரி தமிழர் பேரவை, தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஆகிய அமைப்புகள் சத்துணவு சமையலர் பாப்பாள் மீதான தீண்டாமைக்கு எதிராகக் களமிறங்கின.*

திருப்பூர் மாவட்டம் அவிநாசி அருகே திருமலைக்கவுண்டம் பாளையத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. அங்கு அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த பாப்பாள் என்ற பெண் கடந்த திங்கள் கிழமை சத்துணவு திட்டத்தின்கீழ் சமையல் செய்பவராக பணியில் சேர்ந்தார். இந்த தகவலை அறிந்த அந்த ஊரைச் சேர்ந்த ஒரு பிரிவினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பாப்பாள் சமையல் செய்யக் கூடாது என்று கூறி, பள்ளியை திறக்கவிடாமல் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தகவல் அறிந்து வந்த ஊராட்சி ஒன்றிய ஊரக வட்டார வளர்ச்சி அலுவலர் மீனாட்சி, பாப்பாளை பணியிட மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளார். ஆனால் இந்த உத்தரவிற்கு பாப்பாள் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதையடுத்து அந்த பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.

இதனைத் தொடர்ந்து திருமலை கவுண்டம்பாளையம் அரசுப் பள்ளியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சத்துணவு ஊழியர் சமைக்க தடை விதிக்கும் சாதிவெறி கும்பலை கைது செய்யக் கோரியும் சத்துணவு ஊழியர் அந்த அரசு பள்ளியிலேயே பணியமர்த்த வேண்டும் என்கிற கோரிக்கைகளை வலியுறுத்தியும் பெரியாரிய அம்பேத்கரிய மார்க்சிய மற்றும் தோழமைகள் இயக்கங்கள் சார்பில் அந்த பள்ளி அருகே உள்ள சேவூர் நால்ரோட்டில் சாலை மறியல் நடைபெற்றது.

இதையடுத்து மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் ஆதித் திராவிடர் நலத்துறை அதிகாரி, காவல்துறை அதிகாரிகள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தியதில் சத்துணவு ஊழியர் பாப்பம்மாள் அதே பள்ளியில் பணியாற்றவும் அவர் பணி செய்ய எதிர்ப்பு தெரிவித்த சாதிவெறி கும்பல் மீது உடனடி கைது நடவடிக்கை எடுக்கவும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆதரவாக செயல்பட்ட தலைமை ஆசிரியர், கல்வி அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை வைக்கப்பட்டது

அந்த கோரிக்கையை ஏற்பதாக மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் உறுதியளித்ததால் சாலை மறியல் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது

இந்தப் போராட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகம், தந்தை பெரியார் திராவிடர்கழகம், தலித் விடுதலைக் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஆதித் தமிழர்பேரவை, தீண்டாமை ஒழிப்பு முன்னணி ஆகிய அமைப்புகள் கலந்து கொண்டன.

## உயிருக்குப் போராடியவருக்கு உதவாமல் பசுவுக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்துத்துவ ஆட்சி

உயிருக்குப் போராடியவர்களை உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், போலீசார் பசுவிற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை அனுப்பி வைத்த சம்பவம் இராஜஸ்தானில் அரங்கேறியுள்ளது.

இராஜஸ்தான் மாநிலம் மேவாத் மாவட்டத்தில் உள்ள கோல்கோவான் கிராமத்தைச் சேர்ந்தவர் அக்பர் கான் (31). இவர் தனது நண்பர் ஒருவருடன் இரண்டு பசுமாடுகளை ஹரியானாவுக்கு கொண்டு சென்று கொண்டிருந்தார். ராம்கர் பகுதியில் உள்ள லலாவண்டி கிராமத்துக்கு வந்தபோது ஒரு கும்பல் அவர்களை வழிமறித்தது. பசுக்களை அங்கிருந்து கடத்திச் செல்வதாக நினைத்து அவர்களை கடுமையாகத் தாக்கியது.

இதில் காயமடைந்த அக்பர்கான் இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிய நிலையில் கிடந்தார். இதனையடுத்து சம்பவம் குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் போலீசார் உயிருக்குப் போராடிய 31 வயது இளைஞரான அக்பன் கானுக்கு முன்னுரிமை கொடுக்காமல், மாடுகளை அதன் இருப்பிடத்திற்குக் கொண்டு செல்ல முன்னுரிமை கொடுத்தது தெரிய வந்துள்ளது.

போலீசார் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில், 12.41 மணிக்கு சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 15-லிருந்து 20 நிமிடத்திற்குள் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேசமயம் ராம்நகரில் உள்ள மருத்துவமனைக்கு அக்பர் கான் சுமார் 4 மணிக்குதான் இறந்த நிலையில் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அக்பர் கான் அடிபட்டு கிடந்த இடத்திலிருந்து மருத்துவமனை வெறும் 6 கி.மீ தொலைவில்தான் உள்ளது. இந்த 6 கி.மீ தொலைவை கடக்க போலீசாருக்கு 3 மணி நேரம் ஆகியுள்ளது.

அதேநேரத்தில் சம்பவ இடத்திலிருந்து இரண்டு மாடுகளை கௌசாலா என்ற இடத்திற்கு வெறும் இரண்டு மணி நேரத்தில் கொண்டு சென்றுள்ளனர். கௌசாலா 10 கி.மீ தொலைவில் உள்ள இடமாகும். அதாவது அக்பர் கானை 6 கி.மீ தொலைவில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமல், 10 கி.மீ தொலைவில் உள்ள இடத்திற்கு மாடுகளை முதலில் கொண்டு சென்றுள்ளனர். இதன்மூலம் உயிருக்கு போராடியவரை மீட்காமல் மாடுகளுக்கு போலீசார் முக்கியத்துவம் அளித்தது தெரியவந்துள்ளது.

## தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்!

‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு முகவரிப் பட்டியலுக்குரிய முழுமையான சந்தாத் தொகையை வழங்காத தோழர்கள். மீதமுள்ள தொகையை உடனடியாக அனுப்பி உதவ வேண்டுகிறோம். இதுவரை ‘சந்தா’ சேர்க்காத தோழர்கள், ‘சந்தா’ சேர்த்து இதழ் பரவிட ஒத்துழைக்க வேண்டுகிறோம். – **நிர்வாகி**

98414 89896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 26th July 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN